**செ.வெ.எண்: 581** **நாள்: 10.10.2021**

**புதுக்கோட்டை மாவட்டம்**

**திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம்,**

**வேப்பங்குடி ஊராட்சியில் ரூ.15.67 லட்சம் மதிப்பீட்டில்**

**புதிய ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினை**

**மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் துவக்கி வைத்தார்.**

---

புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், வேப்பங்குடி ஊராட்சி, தேத்தான்பட்டி கிராமப் பொதுமக்களின் குடிநீர் பயன்பாட்டிற்காக ஒன்றிய பொதுநிதியின்கீழ் ரூ.15.67 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணியினை பொற்பனைக்கோட்டையில் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் இன்று (10.10.2021) துவக்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.கவிதா ராமு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பின்னர் மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது;

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் மக்கள் நலன் காக்கும் திட்டங்களால் உள்ளாட்சியில் கிராமங்களில் அடிப்படை வசதிகள் நிறைவேற்றும் வகையில் வளர்ச்சிப் பணிகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வேப்பங்குடி ஊராட்சி, தேத்தான்பட்டி கிராமப் பொதுமக்களின் குடிநீர் தேவையை நிறைவேற்றும் வகையில் ரூ.15.67 லட்சம் மதிப்பில் ஆழ்குழாய் கிணறு அமைக்கும் பணி இன்று (10.10.2021) துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என மாண்புமிகு சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர்நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, ஊராட்சிமன்றத் தலைவர்கள் ஆர்.ராஜாங்கம், செல்வி ராமதாஸ், ஒன்றியக்குழு உறுப்பினர் வெள்ளையம்மாள் சுப்பிரமணியபாரதி, வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்பிரமணியன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**